


haag

HOUSING FOR THE AGED ACTION GROUP

HOME at last

Tamil – தமிழ்

# முதியோர் வீட்டுவசதி குறித்த தகவல் மற்றும் ஆதரவு

வயதாகும்போது பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க, நாம் அனைவரும் பாதுகாப்பான மற்றும் வாங்குவதற்குக் கட்டுப்படியாகும் விலையில் வீடுகள் வாங்க வேண்டும். அதனால்தான் வீட்டுவசதி பாதுகாப்பின்மை அல்லது வீடற்ற தன்மையை அனுபவிக்கும் முதியவர்களுக்கு நாங்கள் ஆதரவை வழங்குகிறோம், முதியோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு ஆலோசனை வழங்குகிறோம், முதியோர்களை முதியோர் பராமரிப்புடன் இணைக்கிறோம், முதியோர் வீட்டுவசதிக்காகப் பரிந்து பேசுகின்றோம்

எங்கள் சேவைகள் 50 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட விக்டோரிய வாசிகளுக்கும்,
45 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட பூர்வீக மற்றும் டோரஸ் நீரிணைத் தீவுவாசிகளுக்கும் கிடைக்கின்றன. அனைத்து கலாச்சார பின்னணிகள், திறன்கள், இனங்கள், பாலின அடையாளங்கள், இடைப்பாலின வேறுபாடுகள், பாலியல் நோக்குநிலைகள் மற்றும் மத நம்பிக்கைகள் கொண்ட மக்களை நாங்கள் வரவேற்கிறோம்.

Rainbow Tick

oldertenants.org.au
Level 1, Ross House,
247 Flinders Lane, Melbourne
(03) 9654 7389
haag@oldertenants.org.au

கோரிக்கையின் பேரில் மொழிபெயர்ப்பாளர்களைப் பெற்றுக்கொள்ளலாம்
எங்கள் அலுவலகம் சக்கர நாற்காலி அணுகக்கூடியது

## தனியார் வாடகைக்கு உதவி

வாடகை செலுத்துவதில் உங்களுக்கு சிரமம் உள்ளதா? நீங்கள் வீட்டை விட்டு வெளியேறும்படி கேட்கப்பட்டீர்களா? உங்கள் வீட்டில் ஏதாவது உடைந்து, உங்கள் வீட்டு உரிமையாளர் அதை சரிசெய்யவில்லையா?
நீங்கள் ஒரு தனியார் வாடகை வீட்டில் வசிக்கும் வயதான நபராக இருந்தால், உங்கள் வீட்டு உரிமையாளர் அல்லது ‘ரியல் எஸ்டேட்’ முகவருடனான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஆலோசனையை நாங்கள் வழங்க முடியும், அதே போல் பிற வீட்டு விருப்பங்கள் பற்றிய தகவல்களையும் வழங்க முடியும்.
இலவச மற்றும் இரகசிய தகவலுக்கு **1300 765 178** என்ற எண்ணில் Home at Last இனை அழைக்கவும்.

## வீட்டுவசதியைக் கண்டுபிடிக்க உதவுதல்

உங்களால் வாங்கக் கட்டுப்படியாகும் வீட்டைக் கண்டுபிடிக்க உங்களுக்கு உதவி தேவையா?
எங்கள் Home at Last சேவை தகுதியான விக்டோரிய வாசிகளுக்கு மலிவு விலை, பொது அல்லது சமூக வீட்டுவசதிக்கு விண்ணப்பிக்க தகவல் மற்றும் ஆதரவை வழங்க முடியும்.
நாங்கள் உங்களுக்கு நேரடியாக உதவ முடியும், அல்லது எங்களால் உங்களுக்கு உதவ முடியாவிட்டால் பிற சேவைகளுடன் உங்களை இணைக்க முடியும்.
இலவச மற்றும் ரகசிய தகவலுக்கு Home at Last ஐ அழைக்கவும் **1300 765 178**

## முதியோர் பராமரிப்பு இல்லத்தைக் கண்டறிய உதவுதல்

உங்களுக்கு வீட்டில் ஏதாவது சில உதவி தேவையா? முதியோர் பராமரிப்பு பற்றி ஏதேனும் கேள்விகள் உள்ளதா? என்ன உதவி கிடைக்கிறது என்று தெரிந்து கொள்ள வேண்டுமா?
உங்கள் வீட்டில் சுதந்திரமாக வாழ்வதற்கான உதவியைப் பெற **1300 765 178** என்ற எண்ணில் எங்கள் care finder [பராமரிப்பு கண்டுபிடிப்பாளர்] சேவையை அழைக்கவும்.

## முதியோர் இல்லத்தில் உதவி வேண்டுமா?

ஓய்வுபெற்றோருக்கான வீட்டைத் தேர்ந்தெடுப்பது, அதில் வாழ்வது மற்றும் வெளியேறுவது கடினமாக இருக்கலாம்.
உங்கள் ஒப்பந்தத்தில் உள்ள ஓர் ஒப்பந்தகாலம், நியாயமற்ற அல்லது அதிகரிக்கப்பட்ட கட்டணம் அல்லது நிர்வாகம் உங்களை நடாத்தும் விதம் குறித்து நீங்கள் கவலைகொண்டுள்ளீர்களா?
Retirement Housing Advice Service [முதியோர். வீட்டுவசதி ஆலோசனை சேவை] ஐ
**(03) 9654 7389** என்ற எண்ணில் அழைக்கவும்



VICTORIA
விக்டோரிய அரசாங்கம், Wicking Trust, Ian Rollo Currie Estate Foundati மற்றும் எங்கள் பிற பரோபகார நிதியளிப்பவர்களின் ஆதரவை HAAG அங்கீகரிக்கிறது. எங்கள் care finder சேவை விக்டோரியாவில் உள்ள Primary Health Networks [முதன்மைச் சுகாதார வலையமைப்புகளால்] ஆதரிக்கப்படுகிறது.